**செய்தி வெளியீடு எண்: 026** **நாள்: 10.01.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (10.1.2019) தலைமைச் செயலகத்தில், நிதித்துறை சார்பில் 288 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அரசு அலுவலங்களில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை (Integrated Financial & Human Resources Management System) மென்பொருள் பயன்பாட்டு திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

இந்த ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை மென்பொருளை பயன்படுத்துவதன் மூலமாக, அரசின் நிகழ்நேர வரவு மற்றும் செலவுகளை உடனடியாகவும், இதர விவரங்களை எளிமையாகவும் பெறுவதோடு, அரசின் நிர்வாகமும் மேம்படும். மேலும், பொதுமக்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் கட்டணங்களை சிரமமின்றி செலுத்த இத்திட்டம் பெரிதும் உதவும். கருவூலக் கணக்குத் துறை மற்றும் தொடர்புடைய பிற துறைகளின் பங்கேற்பின் மூலமாக நிகழ்நேர புள்ளி விவரங்கள், மனிதவள மேலாண்மை (ஓய்வூதியம் உட்பட) எளிமையாக்கப்பட்டு அரசு ஊழியர்களின் பணிச்சுமை குறைவதோடு, காகிதமில்லா அலுவலக நிர்வாகத்திற்கு வழிவகுக்கும்.

இத்திட்டத்தில், 9 லட்சம் அரசு ஊழியர்களின் பணிப்பதிவேடுகளும், மின் பதிவேடுகளாக மாற்றப்பட்டு, அவர்களின் சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, விடுப்பு மேலாண்மை மற்றும் இதர விவரங்கள் மிக விரைவாகவும், துல்லியமாகவும் பராமரிக்க இயலும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தினைச் செயல்படுத்த Accenture Services Pvt. Ltd., நிறுவனம் இத்திட்டத்தின் ஆலோசனை முகமையாகவும், விப்ரோ லிமிடெட் நிறுவனம் இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும், Pricewaterhousecoopers நிறுவனம் இத்திட்டத்தின் மூன்றாம் நபர் தணிக்கை முகமையாகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது, இத்திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனத்தால், மென்பொருள் தொடர்பான தீர்வுகளை கண்டறிந்து, அரசின் பிற பங்கேற்பாளர்களை ஒருங்கிணைத்து, பொது வழித்தடத்தில் செயல்படுத்தி, அரசு ஊழியர்களின் பணிப்பதிவேட்டில் உள்ள விவரங்களை பதிவேற்றம் செய்து முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. மேலும், பணம் பெற்று வழங்கும் 23,000 அலுவலர்களிடமிருந்து (Drawing & Disbursing Officers) பெறப்பட்ட தகவல் தொகுப்புகள் இம்மென்பொருள் தீர்வில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. கருவூலக் கணக்குத் துறை சார்ந்த 295 அலுவலகங்களில் வன்பொருட்கள் மற்றும் கூடுதலான இணையதள வசதிகள் திட்ட ஒருங்கிணைப்பாளரால் செய்து தரப்பட்டுள்ளது.

கருவூலம் மற்றும் கணக்குத் துறை, முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அரசு அலுவலர்களுக்கு இந்த மென்பொருள் பயன்பாடு குறித்த திறனூட்டல், மாற்று மேலாண்மை மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 85,000–க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களுக்கு இம்மென்பொருளில் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை மென்பொருள் பயன்பாட்டு திட்டம் இரண்டு தொகுப்புகளாக தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி, முதல் தொகுப்பாக சேலம், தேனி, விழுப்புரம், ஈரோடு, கரூர், நாமக்கல், கன்னியாகுமரி, விருதுநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர், திருப்பூர், சிவகங்கை, திருவாரூர் ஆகிய மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களான தலைமைச் செயலகம், சென்னை (கிழக்கு) மற்றும் மதுரை, சார் சம்பளக் கணக்கு அலுவலகம் (சென்னை மாநகராட்சி) ஆகிய அலுவலங்களில் இம்மென்பொருள் செயல்பாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

மேலும், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கடலூர், நீலகிரி, நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தருமபுரி, வேலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார் சம்பளக் கணக்கு அலுவலகம் (புதுதில்லி), சம்பளக் கணக்கு அலுவலகம் (சென்னை – வடக்கு), சம்பளக் கணக்கு அலுவலகம் (உயர்நீதிமன்றம், சென்னை), சம்பளக் கணக்கு அலுவலகம் (சென்னை – தெற்கு) மற்றும் சார் சம்பளக் கணக்கு அலுவலகம் (உயர்நீதிமன்ற கிளை, மதுரை) ஆகிய அலுவலகங்களில் இரண்டாம் தொகுப்பாக இம்மென்பொருள் விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., கருவூலம் மற்றும் கணக்குத் துறை முதன்மைச் செயலாளர் /ஆணையர் திரு. தென்காசி சு ஜவஹர், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் (செலவினம்) திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., நிதித்துறை துணைச் செயலாளர் திரு.எம். அரவிந்த், இ.ஆ.ப., நிதித்துறை துணைச் செயலாளர் (வரவு – செலவினம்) திரு.எச். கிருஷ்ணன்உன்னி, இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் (மின் ஆளுமை) திரு.மகாபாரதி, விப்ரோ நிறுவனத்தின் திட்ட இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 10.1.2019**